6th July 1962]

THE HON. SRI V. RAMAIAH: (*a*) No, Sir.

(*b*) The proposal can be considered only after watching for some time the working of the Vidur Reservoir already formed in the lower reach of the river.

குன்னூர் கிராம மக்கள் (நிவாரணம்)

* 166-பி. கேள்வி.—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் (திருமதி அ. கிருஷ்ணவேணி அவர்களின் சார்பாக): கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வைகை அணைகட்டினால் குன்னூர் கிராமம் பாதிக்கப்படுவதாய் அங்கு வசிக்கும் மக்கள் மிகவும் சிரமமும், சுகாதாரக் குறைவும் அடைந்து வருவது சர்க்காருக்குத் தெரியுமா?

(இ) அப்படியானால், அவர்களை உடனடியாக வேறு இடத்திற்கு மாற்ற உத்தேசமுண்டா?

THE HON. SRI V. RAMAIAH: (அ) & (இ) The Government are aware of the difficulties and the question of rehabilitation of the affected persons is under their active consideration.

Tank-bed lands in estates (pattas)

கனம் சபாநாயகர்: 166-சி எண்ணுள்ள கேள்வியை கொடுத்த கனம் அங்கத்தினர் சபையில் இல்லாததால், கேள்வியும் பதிலும் சட்டசபை விவாத வெளியீட்டில் அச்சிடப்படும்.

* 166-C *Q*.—SRI C. SRINIVASAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government propose to regrant pattas in respect of tank-bed lands in estates to increase food production during the plan period?

THE HON. SRI V. RAMAIAH: No, Sir.

திருப்பத்தூர் கிராம அதிகாரிகள் (வேலை நிறுத்தம்)

* 166-டி கேள்வி.—திரு. அ. பெ. தர்மலிங்கம் (திரு. எம். பி. வடிவேல் அவர்களின் சார்பாக): கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்ட கிராம உத்தியோகஸ்தர்கள் அண்மையில் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அரசாங்கத்திற்கு அறிவிப்பு கொடுத்துள்ளார்களா?

(இ) அப்படியானால், அதைப்பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) No.

(*b*) Does not arise.